අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන සහ වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය 'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு 'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
Ministry of Education, Higher Education and Vocational Education 'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112785818
info@moe.gov.lk www.moe.gov.lk

මගේ යොමුව / எனது இல. / My Ref. ED/07/97/07 | ඔබේ යොමුව / உமது இல. / Your Ref. | දිනය / திகதி / Date 2025/11/27

**சுற்றுநிருப இலக்கம் : 41/2025**

மேல் மற்றும் தென் மாகாணக் கல்வி செயலாளர்கள்,
மேல் மற்றும் தென் மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்,
மேல் மற்றும் தென் மாகாணங்களின் அனைத்து வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,
மேல் மற்றும் தென் மாகாணங்களின் அனைத்து கோட்டக் கல்வி பணிப்பாளர்கள்,
மேல் மற்றும் தென் மாகாணங்களின் அனைத்து பிரிவெனாதிபதிகள்;,
மேல் மற்றும் தென் மாகாணங்களின் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் அதிபர்கள்,

**தெரிவு செய்யப்பட்ட பாடசாலை மாணவர்கள் மற்றும் தெரிவு செய்யப்பட்ட பிரிவெனாக்களின் பிக்குமாரல்லாத/ பிக்குமார்களான மாணவர்களுக்கு உள்நாட்டு காலணி உற்பத்தியாளர்கள் காலணிகளை வழங்கும் போது பின்பற்ற வேண்டிய நடவடிக்கைகள்**

2026 ஆம் ஆண்டில் பயன்படுத்தக் கூடியவாறு 2025/06/30 ஆம் திகதியில், மாணவர்களின் எண்ணிக்கை 250 இற்குக் குறைவான பாடசாலைகளில் இருக்கும் அனைத்து மாணவர்களுக்கும், முதலாவது நியதியான 250 இற்குக் குறைவான அனைத்துப் பாடசாலைகள் தவிர, அன்றைய தினம் மாணவர்களின் எண்ணிக்கை 250 இற்கும் அதிகமாகவும் 500 வரையும் உள்ள பெருந்தோட்டப் பாடசாலைகளில் இருக்கும் அனைத்து மாணவர்களுக்கும், விசேட தேவையுடைய மாணவர்கள் கல்வி பயிலும் பாடசாலைகளில் உள்ள மாணவர்களுக்கும், தெரிவு செய்யப்பட்ட பிரிவெனாக்களில் உள்ள பிக்குமார்களல்லாத மாணவர்களுக்கும் மற்றும் பிக்கு மாணவர்களுக்கும், சீலமாதா கல்வி நிலையங்களில் உள்ள சீல மாதாக்களுக்கும் காலணிகளைப் பெற்றுக்கொள்வதற்காக 2026 ஆம் ஆண்டிற்கான வவுச்சர்களை வழங்கும் நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது என்பதைச் மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றேன்

இதன் போது, மேல் மற்றும் தென் மாகாணங்களில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் இருக்கும் மாணவர்களுக்காக உள்நாட்டு காலணி உற்பத்தியாளர்களால் உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யப்படும் ஒரு சோடி காலணிகளைப் பாடசாலை மற்றும் பிரிவெனாவிற்கு நேரடியாக வந்து வழங்கும் முன்னோடித் செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கப்படுகிறது. இந்த காலணிகளை மாணவர்களுக்கு வழங்குவதற்கான செயன்முறை இந்தக் சுற்றுநிருபத்திற்கு அமைய நடை முறைப்படுத்தப்படுவது கட்டாயமாகும்.

ගරු අමාත්‍ය / கௌரவ அமைச்சர் / Hon. Minister
+94112784832
+94112784825
minister.education@moe.gov.lk
ලේකම් / செயலாளர் / Secretary
+94112784811
+94112785162
secretary.education@moe.gov.lk
moesecretaryoffice@gmail.com

02. இதற்கு தேவையான காலணி வவுச்சர்கள், கல்வி, உயர் கல்வி மற்றும் தொழில் கல்வி அமைச்சினால் தங்களுக்கு வழங்கப்பட்டதன் பின்னர், மேலே குறிப்பிட்டவாறு தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகள் மற்றும் பிரிவெனாக்களுக்கு அவற்றை விரைவாக விநியோகித்து, குறித்த வவுச்சர்களை சம்பந்தப்பட்ட மாணவ மாணவியர், பிக்கு மாணவர்கள் மற்றும் சீல மாதாக்களுக்கு 2025/12/07 ஆம் திகதி முதல் தாமதமின்றி வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

03. 2025/06/30 ஆம் திகதியில் கல்வி அமைச்சின் புள்ளிவிபரப் பிரிவினால் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகள் தொடர்பில் வழங்கப்பட்டுள்ள மாணவர் எண்ணிக்கைத் தகவல்கள் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழில் கல்வி அமைச்சின் பிரிவெனாப் பிரிவினால் தெரிவு செய்யப்பட்ட பிரிவெனாக்கள் தொடர்பில் வழங்கப்பட்டுள்ள மாணவர் எண்ணிக்கைத் தகவல்களின் அடிப்படையில் இந்த வவுச்சர்கள் வழங்கப்படும்.

04. இதில்,

4.1 இந்த முன்னோடிச் செயற்றிட்டத்தின் கீழ் 2026 ஆம் ஆண்டிற்கான காலணிகளைப் பெற்றுக்கொள்வதற்காக அனைத்துச் சலுகை பெறும் மாணவர்களுக்கும், **"இது ஒரு முன்னோடிச் செயற்றிட்டம்; பாடசாலைகளுக்கு வருகை தரும் உள்நாட்டு காலணி உற்பத்தியாளர்களிடமிருந்து மட்டுமே பெற்றுக்கொள்ள முடியும்"** என்று குறிப்பிடப்பட்ட ஒரு வவுச்சர் வழங்கப்படும். இந்த வவுச்சரின் செல்லுபடியாகும் காலம் 2025/12/15 ஆம் திகதி முதல் 2026/01/15 ஆம் திகதி வரை மட்டுமே ஆகும். அத்தியாவசியமான காரணங்களுக்காக மாத்திரம் திகதி நீடிப்பு பரிசீலிக்கப்படுவதால், குறித்த திகதிக்கு முன்னர் காலணிகளைப் பெற்றுக்கொள்ளக் கூடியவாறு அதிபர்கள் /பிரிவெனாதிபதிகள் தேவையான நடவடிக்கைகளை ஒருங்கிணைத்துக்கொள்ள வேண்டும்.

4.2 2026 ஆம் ஆண்டில் பாடசாலைக் காலணி வவுச்சர்களுக்கான காலணிகளை வழங்குதல், அதற்காகத் கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சில் பதிவு செய்யப்பட்டுள்ள உள்நாட்டு காலணி உற்பத்தியாளர்களூடாக மாத்திரமே மேற்கொள்ளப்படும்


4.3 இந்த வவுச்சரானது மாணவர்களுக்கு வழங்கப்படும் பகுதி மற்றும் அதிபர்/பிரிவெனாதிபதி வைத்திருக்கும் பகுதி என இரண்டு பகுதிகளைக் கொண்டது. பாடசாலைக்கு/பிரிவெனாவிற்கு வருகை தரும் உள்நாட்டு காலணி உற்பத்தியாளர்களிடமிருந்து காலணிகளைப் பெற்றுக்கொள்ளக் கூடியவாறு பாடசாலைக்கு வருகை தரும் நாளில் மாணவர்களின் பகுதி மாணவர்களிடம் கையளிக்கப்பட வேண்டும். அதுவரையில் இந்த வவுச்சரை அதிபர்/பிரிவெனாதிபதியின் பொறுப்பில் வைத்திருக்க வேண்டும்.

4.4 பாடசாலைக்கு/பிரிவெனாவிற்கு வருகை தரும் உள்நாட்டு காலணி உற்பத்தியாளர்களுடன் கலந்துரையாடி, ஒவ்வொரு மாணவருக்கும் காலணி சோடியையும் அணிந்து, மாணவருக்குப் பொருத்தமான காலணி சோடியைத்

தெரிவு செய்வதற்குத் தேவையான வசதிகளையும் சந்தர்ப்பத்தையும் அதிபர்/பிரிவெனாதிபதி வழங்க வேண்டும்.

4.5 மாணவர்களுக்கு வழங்கப்பட்ட காலணி சோடிகள் **உற்பத்திக் கோளாறுகள்** காரணமாக சேதமடைந்தால் மாத்திரம், அந்தக் காலணிச் சோடிக்குப் பதிலாக புதிய காலணி சோடியை வழங்குவதற்கு உள்நாட்டு காலணி உற்பத்தியாளர்கள் கடமைப்பட்டுள்ளனர். அவ்வாறான சந்தர்ப்பங்களில், அதிபர்/பிரிவெனாதிபதி தமது பாடசாலைக்கு/பிரிவெனாவிற்கு காலணிகளை வழங்கிய உள்நாட்டு காலணி உற்பத்தியாளருக்கு அறிவித்து, சம்பந்தப்பட்ட மாணவருக்குப் புதிய காலணி சோடியொன்றை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

முன் புறம்/ பின் புறம்




05. கல்வி, உயர் கல்வி மற்றும் தொழில் கல்வி அமைச்சினால் பாதுகாப்பு அச்சிடல் முறைகளைப் பயன்படுத்தி அச்சிடப்படும் இந்த காலணி வவுச்சர்கள், தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகள் மற்றும் பிரிவெனாக்களின் அடிப்படையில் பொதி செய்யப்பட்டு கோட்டக் கல்வி அலுவலகங்களின் அடிப்படையில் பிரிக்கப்பட்டு, 2025/12/07 ஆம் திகதிக்கு முன்னர் பாடசாலைகளுக்கு விநியோகிப்பதற்காக மாகாண கல்வித் திணைக்களங்களுக்கு வழங்கப்படும்.

06. வலயக் கல்வி அலுவலகங்கள் / கோட்டக் கல்வி அலுவலகங்களுக்கு வவுச்சர்களை வழங்குதல்.

கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சினால் மாகாண கல்வித் திணைக்களத்திற்கு வழங்கப்படும் வவுச்சர்கள் கிடைத்தவுடன் வலயக் கல்வி அலுவலகங்களுக்கு விநியோகிக்கப்பட வேண்டும். அத்துடன், வலயக் கல்வி அலுவலகங்கள் இந்த வவுச்சர்களை விரைவாகக் கோட்டக் கல்வி அலுவலகங்கள்

மற்றும் பிரிவெனாக்களுக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். கோட்டக் கல்வி அலுவலகங்கள் தமது கோட்டத்திலுள்ள தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்குரிய வவுச்சர்களைப் பரிசோதித்து ஒப்படைக்க வேண்டும். (தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் பெயர் பட்டியல் மாகாண ரீதியாகப் பிரிக்கப்பட்டு அதன் மென்பிரதிகள் வழங்கப்படும்.)

(கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சினால் மாகாண கல்வித் திணைக்களத்திற்கு காலணி வவுச்சர்கள் வழங்கப்படும்போது SSV 01 (EDU) படிவத்தையும், மாகாண கல்வித் திணைக்களத்தினால் வலயக் கல்வி அலுவலகங்களுக்குப் பாடசாலைக் காலணி வவுச்சர்கள் வழங்கப்படும்போது SSV 01 (Zone) படிவத்தையும், வலயக் கல்வி அலுவலகங்களினால் கோட்டக் கல்வி அலுவலகங்களுக்குப் பாடசாலைக் காலணி வவுச்சர்கள் வழங்கப்படும்போது SSV 01 (DIV) படிவத்தையும் மற்றும் வலய அலுவலகங்களினால் பிரிவெனாக்களுக்கு வழங்கப்படும்போது SSV 02 (Piv) படிவத்தையும் பயன்படுத்த வேண்டும்.)

07. பாடசாலை அதிபர்கள் மற்றும் பிரிவெனாதிபதி தேரர்களுக்கு வவுச்சர்களை கையளித்தல் / பொறுப்பேற்றல்

தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகள் மற்றும் பிரிவெனாக்களின் அடிப்படையில் தனித்தனியாகப் பொதி செய்யப்பட்டு, பாடசாலை அதிபர்கள் மற்றும் பிரிவெனாதிபதி தேரர்களுக்குக் கோட்டக் கல்வி அலுவலகங்கள் மற்றும் வலயக் கல்வி அலுவலகங்களால் (பிரிவெனாக்களுக்கு) வழங்கப்படும் காலணி வவுச்சர்களைத் தொடர் இலக்கங்களுக்கு அமைய நன்கு பரிசோதித்து கையளித்தல் /பொறுப்பேற்றல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இதன்போது கோட்டக் கல்வி அலுவலகங்களினாலும் மற்றும் வலய அலுவலகங்களினாலும் (பிரிவெனாக்களுக்கு) SSV 02 (Sch) / SSV 02 (Piv) படிவங்களைப் பயன்படுத்திப் பாடசாலைக் காலணி வவுச்சர்களைப் பாடசாலைகள் மற்றும் பிரிவெனாக்களுக்கு வழங்க வேண்டும்.

**08. மாணவர்களுக்கு வவுச்சர்களை விநியோகிப்பது தொடர்பில் அதிபர்கள் / பிரிவெனாதிபதி தேரர்களுக்கான அறிவுறுத்தல்கள்**

08.1 கோட்டக் கல்வி அலுவலகங்களினால் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழில் கல்வி அமைச்சின் பிரிவெனாப் பிரிவினால் அந்தந்தப் பாடசாலைகள் மற்றும் பிரிவெனாக்கள் தொடர்பில் 2025.06.30 ஆம் திகதிக்கு வழங்கப்பட்ட மாணவர் எண்ணிக்கை தொடர்பான அனுப்பப்பட்ட தகவல்களின் அடிப்படையில் பாடசாலைக் காலணி வவுச்சர்கள் பாடசாலைகள் / பிரிவெனாக்களின் அடிப்படையில் பிரித்து அனுப்பப்படுவதுடன், பாடசாலை / பிரிவெனாவின் வகுப்புப் பெயர் பட்டியலில் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ள உறுதிப்படுத்தப்பட்ட உண்மையான மாணவ மாணவியருக்கு மாத்திரம் வவுச்சர்களை வழங்குவது பிரிவெனாதிபதி தேரர்கள் / அதிபர்களின் பொறுப்பாகும்.

08.2 பாடசாலை / பிரிவெனாவிற்கு வழங்கப்படும் காலணி வவுச்சர்களை உப படிவம் ஒன்றில் உள்ளடக்கிக் கவனமாகப் பாதுகாக்க வேண்டும். அத்துடன், மிக விரைவாகவும் சரியாகவும் சலுகை பெறுபவர்களுக்கு விநியோகிப்பதற்குப் பொருத்தமான செயற்றிட்டம் ஒன்றைப் பயன்படுத்த பிரிவெனாதிபதிகள் / அதிபர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். இதன்போது அந்தந்தச் சலுகை பெறுபவர்களின் பெயர்களை உள்ளடக்கித் தயாரிக்கப்படும் SSV 03 படிவத்தைச் சரியாகப் பூர்த்தி செய்து உரிய வவுச்சர்களைச் சலுகை பெறுபவர்களிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், வழங்கப்பட்ட வவுச்சர்களின் மூலப்பகுதியை (Counterfoil) பாதுகாப்பாக அதிபர் பொறுப்பில் வைத்திருக்க வேண்டும். பாடசாலைக்குக் கிடைக்கப்பெற்ற காலணி வவுச்சர்களில் சலுகை பெறுபவர்களுக்கு விநியோகித்ததன் பின்னர் மேலதிகமாக மிகுதி இருக்குமாயின், அதனை SSV 04 படிவத்தில் உள்ளடக்கி, கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சின் பெறுகைப் பிரிவிடம் வழங்குவதற்காகப் பாதுகாப்பாகப் பொதி செய்து கோட்டக் கல்விப் பணிப்பாளர் / வலயக் கல்விப் பணிப்பாளர் ஊடாக மாகாணக் கல்விப் பணிப்பாளரிடம் ஒப்படைக்க வேண்டும்.

08.3 மேற்படி தெரிவு செய்வதற்குரிய நியதிகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட ஏதேனும் ஒரு பாடசாலைக்குக் கிடைக்கப் பெற்ற பாடசாலைக் காலணி வவுச்சர்களின் எண்ணிக்கை போதாத சந்தர்ப்பத்தில், அதற்கான காரணங்களுடன் கோட்டக் கல்விப் பணிப்பாளர் / வலயக் கல்விப் பணிப்பாளர் / மாகாணக் கல்விப் பணிப்பாளரின் பரிந்துரைகளுடன் SSV 05 படிவத்தின் மூலம் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சிற்கு கோரிக்கை விடுக்கப்பட வேண்டும். அத்துடன், தேவையான மேலதிக வவுச்சர்களின் எண்ணிக்கை கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சினால் வழங்கப்படும்.

08.4 பாடசாலைக்குக் கிடைக்கும் அனைத்து வவுச்சர்களின் பின்பக்கத்திலும் ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் அதிபரின் உத்தியோகபூர்வ பதவி முத்திரை இடப்பட வேண்டும்.

08.5 உத்தியோகபூர்வ பதவி முத்திரையிடப்பட்ட வவுச்சர்கள், ஒவ்வொரு வகுப்பிலுள்ள மாணவர்களுக்கும் வழங்குவதற்காக வகுப்புப் பொறுப்பாசிரியர்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். வகுப்புப் பொறுப்பாசிரியர் இந்த வவுச்சர்களைப் பதிவேட்டில் குறித்து, அந்தந்த மாணவர்களது பெயரை ஒவ்வொரு வவுச்சரிலும் குறித்து வைக்க வேண்டும். அத்துடன், சம்பந்தப்பட்ட காலணி உற்பத்தியாளர்கள் பாடசாலைக்கு வருகை தரும் தினத்தில் வவுச்சர்களைச் சரியாக மாணவர்களிடம் வழங்கி, அவர்களின் கையொப்பத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும். இதற்காக SSV 03 படிவம் பயன்படுத்தப்பட வேண்டும்.

08.6 தரம் 1 முதல் தரம் 5 வரையான மாணவர்களுக்குக் காலணி வவுச்சர்களை வழங்குவதற்காகப் பொருத்தமான நடவடிக்கையை அதிபர் பின்பற்ற வேண்டும். (காலணிகள் வழங்கும் தினத்தில் பெற்றோர்களை வரவழைத்து நேரடியாக அவர்கள் கையில் வவுச்சர்களை வழங்குவது மிகவும் பொருத்தமானது)

08.7 வவுச்சரின் இலக்கங்கள் சேதமடைந்தால் அது செல்லுபடியற்றதாகிவிடும் என்பதால், அது குறித்துக் கவனமாக இருக்க வேண்டும்

08.8 இந்த வவுச்சர்கள் வழங்கப்பட்டதன் பின்னர், குறித்த கையொப்பப் பதிவேட்டை (SSV 03) எதிர்காலக் கணக்காய்வு நடவடிக்கைகளுக்காகப் பாடசாலையில் / பிரிவெனாவில் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும். அத்துடன், பிரிவெனாதிபதி / அதிபரினால் சான்றுப்படுத்தப்பட்ட ஒரு பிரதியைக் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சின் பெறுகைப் பிரிவிற்கு அனுப்பி வைக்க வேண்டும்

08.9 அதிபருக்குக் கிடைக்கும் அனைத்துக் காலணி வவுச்சர்களையும் முறையாகவும் சரியாகவும் அனைத்து மாணவர்களுக்கும் வழங்குவதைத் வெளிப்படைத்தன்மையுடன் நிறைவேற்ற அதிபர் கடமைப்பட்டுள்ளார். அத்துடன், அதற்குரிய அனைத்து ஆவணங்களையும் முறையாகப் பூர்த்தி செய்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

09. இந்த வவுச்சர்கள் மூலம் காலணிகளைப் பெற்றுக்கொள்வது தொடர்பாகப் பெற்றோர்களை அறிவுறுத்துவது அதிபரின் பணியாகும். ஆனால், காலணிகளைப் பெற்றுக்கொள்வது தொடர்பாக எந்தவொரு வர்த்தக நாமத்தையும் அல்லது வர்த்தக நிலையத்தையும் மேம்படுத்துவதைத் தவிர்ப்பதற்கு அதிபர்கள் உறுதியாகக் கவனம் செலுத்த வேண்டும். மேலும், கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சில் பதிவு செய்யப்பட்ட உள்நாட்டு காலணி உற்பத்தியாளர்களிடமிருந்து மட்டுமே காலணிகளை கொள்வான்வு செய்ய வேண்டும் என மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் அறியப்படுத்த வேண்டும். அத்துடன், இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்காகப் பதிவு செய்யப்பட்ட உள்நாட்டு காலணி உற்பத்தியாளர்களை அது தொடர்பில் விபரங்களைக் காட்சிப்படுத்தச் செய்ய நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**10. மாணவர்களுக்கு வவுச்சர்களை விநியோகித்ததன் பின்னர் மிகுதியை ஒப்படைத்தல்.**

10.1 ஏதேனும் ஒரு பாடசாலையில் வவுச்சர்களை விநியோகித்ததன் பின்னர் மிகுதி இருக்குமானால், அது தொடர்பாக அதிபரினால் கோட்ட / வலயக் கல்வி அலுவலகங்களுக்கு எழுத்து மூலம் அறிவிக்க வேண்டும். மேலும், அந்த மிகுதியான காலணி வவுச்சர்களின் எண்ணிக்கையை கோட்டக் கல்விப் பணிப்பாளரிடம் முறையாக SSV 04 படிவத்தின் மூலம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்

Nalaka Kaluwewe
Secretary
Ministry of Education, Higher Education and Vocational Education

11.4 தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் கல்வி கற்கும் அனைத்து மாணவ மாணவியர்களும், தெரிவு செய்யப்பட்ட பிரிவெனாக்களில் உள்ள பிக்கு மாணவர்கள், சீல மாதாக்கள் மற்றும் பிக்குமார்களல்லாத மாணவர்களும் 2026 ஆம் ஆண்டின் புதிய பாடசாலை தவணை ஆரம்பத்திலேயே காலணிகளை அணிந்து பாடசாலைக்கு சமூகமளிக்க வேண்டும் என்பது கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு மற்றும் அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாகும். எனவே, இது குறித்து விசேட கவனம் செலுத்தி 2025 ஆம் ஆண்டின் இறுதிப் பாடசாலைத் தவணை நிறைவடைய முன்னர் பாடசாலை மாணவர்களுக்கு வவுச்சர்கள் மூலம் காலணிகளை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை நிறைவேற்றுவது தங்கள் அனைவரினதும் பொறுப்பும் கடமையும் ஆகும் என வலியுறுத்த விரும்புகிறேன்.

நாலக கළுவெவ
செயலாளர்
கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு

Nalaka Kaluwewe
Secretary
Ministry of Education, Higher Education and Vocational Education

SSV 01(EDU)

மாகாணக் கல்விப் பணிப்பாளர்
.........................................
.........................................

**<u>2026 பாடசாலைக் காலணிகளுக்கான வவுச்சர்களைப் பகிர்ந்தளித்தல்</u>**

2026 ஆம் ஆண்டிற்காக தங்களால் மாகாணத்திற்குரிய வலயங்களில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்காகக் கோரப்பட்டுள்ள மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழில் கல்வி அமைச்சின் பிரிவெனாக் கிளையினால் பரிந்துரைக்கப்பட்ட பிரிவெனாக்களுக்குரிய காலணி வவுச்சர்களின் எண்ணிக்கை பின்வருமாறு வழங்கப்படுகிறது

| வலயம் | கோட்டம் | வவுச்சர்களின் எண்ணிக்கை | வவுச்சர் இலக்கம் | | பெறுமதி ரூ. சதம் |
|---|---|---|---|---|---|
| | | | இருந்து | வரை | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| மொத்தம் | | | | | |

மேற்குறிப்பிட்ட வவுச்சர்களின் எண்ணிக்கையை சரியாக

ஒப்படைத்தேன் | பெற்றுக் கொண்டேன்

.........................................
செயலாளருக்காக
கல்வி, உயர் கல்வி மற்றும் தொழில் கல்வி அமைச்சு
பதவி முத்திரை

.........................................
மாகாணக் கல்விப் பணிப்பாளர்
பதவி முத்திரை

SSV 01(Zone)

வலயக் கல்விப் பணிப்பாளர்
............................................
............................................

**2026 பாடசாலைக் காலணிகளுக்கான வவுச்சர்களைப் பகிர்ந்தளித்தல்**

2026 ஆம் ஆண்டிற்காக தங்களால் வலயத்திற்குரிய தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்காகக் கோரப்பட்டுள்ள காலணி வவுச்சர்களின் எண்ணிக்கை மற்றும் பிரிவெனாக்களுக்காகப் பரிந்துரைக்கப்பட்ட வவுச்சர்களின் எண்ணிக்கை பின்வருமாறு வழங்கப்படுகிறது

| கோட்டம் | வவுச்சர்களின் எண்ணிக்கை | வவுச்சர் இலக்கம் | | பெறுமதி ரூ. சதம் |
|---|---|---|---|---|
| | | இருந்து | வரை | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| மொத்தம் | | | | |

மேற்குறிப்பிட்ட வவுச்சர்களின் எண்ணிக்கையை சரியாக

ஒப்படைத்தேன்

.........................................
மாகாணக் கல்விப் பணிப்பாளருக்காக
பதவி முத்திரை

பெற்றுக் கொண்டேன்

.........................................
வலயக் கல்விப் பணிப்பாளர்
பதவி முத்திரை

பிரதி : செயலாளர், கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு

SSV 01(DIV)

கோட்டக் கல்விப் பணிப்பாளர்
.............................................
.............................................

**2026 பாடசாலைக் காலணிகளுக்கான வவுச்சர்களைப் பகிர்ந்தளித்தல்**

2026 ஆம் ஆண்டுக்காக தங்களால் கோட்டத்திற்குரிய தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்காகக் கோரப்பட்டுள்ள காலணி வவுச்சர்களின் எண்ணிக்கை பின்வருமாறு வழங்கப்படுகிறது.

| பாடசாலை | வவுச்சர்களின் எண்ணிக்கை | வவுச்சர் இலக்கம் | | பெறுமதி ரூ. சதம் |
|---|---|---|---|---|
| | | இருந்து | வரை | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| மொத்தம் | | | | |

மேற்குறிப்பிட்ட வவுச்சர்களின் எண்ணிக்கையை சரியாக

ஒப்படைத்தேன்

பெற்றுக் கொண்டேன்

.............................................
வலயக் கல்விப் பணிப்பாளருக்காக
பதவி முத்திரை

.............................................
கோட்டக் கல்விப் பணிப்பாளர்ஃ
பதவி முத்திரை

பிரதிகள்:

1. செயலாளர், கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு
2. மாகாணக் கல்விப் பணிப்பாளர்

SSV 02(Piv)

பிரிவெனாதிபதி
..........................................
..........................................

**<u>2026 பாடசாலைக் காலணிகளுக்கான வவுச்சர்களைப் பகிர்ந்தளித்தல்</u>**

2026 ஆம் ஆண்டிற்காக கல்வி, உயர் கல்வி மற்றும் தொழில் கல்வி அமைச்சின் பிரிவெனாக் கிளையினால் வழங்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் தங்களது பிரிவெனாவுக்குரிய காலணி வவுச்சர்களின் எண்ணிக்கை பின்வருமாறு வழங்கப்படுகிறது.

| பிரிவெனா | வவுச்சர்களின் எண்ணிக்கை | வவுச்சர் இலக்கம் | | பெறுமதி ரூ. சதம் |
|---|---|---|---|---|
| | | இருந்து | வரை | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| மொத்தம் | | | | |

மேற்குறிப்பிட்ட வவுச்சர்களின் எண்ணிக்கையை சரியாக

ஒப்படைத்தேன் — பெற்றுக் கொண்டேன்

..........................................
வலயக் கல்விப் பணிப்பாளர்
பதவி முத்திரை

..........................................
பிரிவெனாதிபதி
பதவி முத்திரை

பிரதிகள்:

1. செயலாளர், கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு
2. மாகாணக் கல்விப் பணிப்பாளர்

SSV 02(SCH)

அதிபர்

.............................................

.............................................

**2026 பாடசாலைக் காலணிகளுக்கான வவுச்சர்களைப் பகிர்ந்தளித்தல்**

2026 ஆம் ஆண்டிற்காக தங்களது பாடசாலைக்குரிய காலணி வவுச்சர்களின் எண்ணிக்கை பின்வருமாறு வழங்கப்படுகிறது.

| பாடசாலை | கோட்டம் | வவுச்சர்களின் எண்ணிக்கை | வவுச்சர் இலக்கம் | | பெறுமதி ரூ. சதம் |
|---|---|---|---|---|---|
| | | | இருந்து | வரை | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| மொத்தம் | | | | | |

மேற்குறிப்பிட்ட வவுச்சர்களின் எண்ணிக்கையை சரியாக

ஒப்படைத்தேன்

.........................................
கோட்டக் கல்விப் பணிப்பாளர்
பதவி முத்திரை

பெற்றுக் கொண்டேன்

.........................................
அதிபர்
பதவி முத்திரை

பிரதிகள்:

1. மாகாணக் கல்விப் பணிப்பாளர்
2. வலயக் கல்விப் பணிப்பாளர்

SSV 03

## 2026 பாடசாலைக் காலணிகளுக்கான வவுச்சர்களைப் பகிர்ந்தளித்தல் - வகுப்பு சாராம்சம்

1. 1.1 பாடசாலை / பிரிவெனாவின் பெயர் :-
   1.2 தொகை மதிப்பிலக்கம் :-
2. 2.1 பாடசாலை / பிரிவெனாவுக்குரிய வலயம் :-
   2.2 பாடசாலைக்குரிய கோட்டம் :-
3. வகுப்பு :-

| தொடர் இல. | மாணவர் பெயர் | வவுச்சர் இலக்கம் | பெறுமதி ரூ. | ஒப்படைக்கப்பட்டது - ஆசிரியரின் கையொப்பம் | பெற்றுக் கொண்டேன் - மாணவன் / பாதுகாவலரின் கையொப்பம் |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

.....................................................
ஆசிரியரின் பெயர் மற்றும் கையொப்பம்

.....................................................
அதிபரின் பெயர் மற்றும் கையொப்பம்
பதவி முத்திரை

பிரதிகள்:-

1. செயலாளர், கல்வி, உயர் கல்வி மற்றும் தொழில் கல்வி அமைச்சு
2. மாகாணக் கல்விப் பணிப்பாளர்

**காலணி வவுச்சர்களைப் பகிர்ந்தளித்ததன் பின்னர் மீதமுள்ள வவுச்சர்களைத் திருப்பி ஒப்படைத்தல்**

மேலதிகச் செயலாளர் (பெறுகை)
கல்வி, உயர் கல்வி மற்றும் தொழில் கல்வி அமைச்சு,
இசுறுபாய,
பத்தரமுல்லை.

.......................................................... பாடசாலை / பிரிவெனாவில் உள்ள .............................. மாணவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் மாணவர்களுக்குப் பகிர்ந்தளிப்பதற்காக எனக்கு வழங்கப்பட்ட காலணி வவுச்சர்கள் பகிர்ந்தளிக்கப்பட்ட ஆவணத்தின் படி மீதமுள்ள வவுச்சர்களை இத்துடன் சரியாகத் திருப்பி ஒப்படைக்கிறேன்.

| வகுப்பு | கிடைத்த வவுச்சர்களின் எண்ணிக்கை | பகிர்ந்தளிக்கப்பட்ட வவுச்சர்களின் எண்ணிக்கை | திருப்பி ஒப்படைக்கப்படும் வவுச்சர்களின் எண்ணிக்கை | பெறுமதி ரூ |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |
| | | | | |
| மொத்தம் | | | | |

ஒப்படைத்தேன்

..........................................
அதிபரின் பெயர் மற்றும் கையொப்பம்
பதவி முத்திரை

பெற்றுக் கொண்டேன்

..........................................
கோட்டக் கல்விப் பணிப்பாளர்
பதவி முத்திரை

ஒப்படைத்தேன்

..........................................
கோட்டக் கல்விப் பணிப்பாளர்
பதவி முத்திரை

பெற்றுக் கொண்டேன்

..........................................
வலயக் கல்விப் பணிப்பாளர்
பதவி முத்திரை

ஒப்படைத்தேன்

..........................................
வலயக் கல்விப் பணிப்பாளர்
பதவி முத்திரை

பெற்றுக் கொண்டேன்

..........................................
மாகாணக் கல்விப் பணிப்பாளர்
பதவி முத்திரை

(மாகாணக் கல்விப் பணிப்பாளரால் வலய அலுவலகங்கள் ஊடாக அனுப்பி வைக்கப்படும் அனைத்து மேலதிக வவுச்சர்களையும் சேகரித்து கல்வி அமைச்சின் பெறுகைப் பிரிவுக்கு முறையாக ஒப்படைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்)

SSV 05

## குறைபாடான காலணி வவுச்சர்களின் எண்ணிக்கையை கோருதல்

மேலதிகச் செயலாளர் (பெறுகை)
கல்வி, உயர் கல்வி மற்றும் தொழில் கல்வி அமைச்சு,,
இசுறுபாய,
பத்தரமுல்லை.

........................................................ பாடசாலை / பிரிவெனாவில் உள்ள .............................. மாணவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் மாணவர்களுக்குப் பகிர்ந்தளிப்பதற்காக எனக்கு வழங்கப்பட்ட காலணி வவுச்சர்களின் எண்ணிக்கையானது பாடசாலை / பிரிவெனாவின் மாணவர்களுக்குப் போதுமானதாக இல்லாததால், பின்வரும் எண்ணிக்கையில் காலணி வவுச்சர்களை வழங்குமாறு தயவுடன் கோருகிறேன்.

| வகுப்பு | கிடைத்த வவுச்சர்களின் எண்ணிக்கை | பகிர்ந்தளிக்கப்பட்ட வவுச்சர்களின் எண்ணிக்கை | மேலும் தேவையான வவுச்சர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| එකතුව | | | |

................................................
அதிபரின் பெயர் மற்றும் கையொப்பம்
பதவி முத்திரை

பரிந்துரை ....................................................
கோட்டக் கல்விப் பணிப்பாளரின் பெயர் மற்றும் கையொப்பம்
பதவி முத்திரை

பரிந்துரை ....................................................
வலயக் கல்விப் பணிப்பாளரின் பெயர் மற்றும் கையொப்பம்
பதவி முத்திரை

அனுமதி ....................................................
மாகாணக் கல்விப் பணிப்பாளரின் பெயர் மற்றும் கையொப்பம்
பதவி முத்திரை